**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 03/19

வாக்குமூலம்..வா.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருளாந்து | தொழில் | |
| த/பெ. | அடைக்கலம் | வயது | 45/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 02.04.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் ஏகணிவயல் கிராமத்தில் குடியிருக்கிறேன். எனக்கு வழக்கு உபய வாதிகள் மற்றும் தாவா சொத்தின் விவரம் தெரியும். தாவா சொத்து ஏகணிவயல் தென்பாதி கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்தை நான் பார்த்தியிருக்கிறேன். அதன் விஸ்தீரணம் சுமார் 2.3/4 மா ( இரண்டே முக்கால் ) இருக்கும். தாவாசொத்தின் வடபுறம் வயலும், தென்புறத்தில் 50, 60 குழி விஸ்தீரணத்தில் மண் அடித்து வீடு கட்டியிருக்கிறார்கள். அதில் 2-ம் வாதி தார்சு வீடு கட்டி குடியிருக்கிறார். வடபுறம் உள்ள வயலை செல்வம் தான் விவசாயம் செய்கிறார். தாவா சொத்தின் தென்புறம் நாசூர் கனி வீடு.. வடபுறம் வாதி. மேல்புறம் ரோடு, கிழக்கே முருகன் இடம்.

2) வாதிகள் தாவா வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா சொத்து பொது குடும்ப சொத்துகள் என்பதால் அதில் அவர்களது தகப்பனார் பாகம் கொடுக்கவில்லை என்று வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்துகளில் வாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதி கூட்டு பாத்தியம் இருக்கிறது. 1-ம் பிரதிவாதி குடும்பத்தில் பொருப்பு இல்லாமல் இருக்கிறார். சொத்தை விற்பனை செய்ய பார்க்கிறார். அதனால் விற்க கூடாது என்று வழக்கு போட்டியிருக்கிறார். வாதிகளுக்கு வழக்கு சொத்துகளை தவிர வேறு சொத்துகள் இல்லை. வாதிகளின் தாயார் இறந்ததற்கு வாதிகள் தான் செலவு செய்தார்கள்.

3) தாவா சொத்தில் உள்ள வீட்டை தவிர வாதிகளுக்கு வேற வீடுகள் இல்லை.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.